பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 05 ஞாயிற்றுக்கிழமை 19.06.2022 கதிர் 117

## ஐ.எம்.எவ். குழு நாளை இலங்கைக்கு விஜயம்

சர்வதேசநாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு ஒன்று நாளை இலங்கை வரவுள்ளது என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறப்படவுள்ள கடன் தொடர்பான கலந்துரையாடல்களை முன்னெடுத்துச் செல்லும்

2

## இலங்கைக்கு மேலும் உதவுவது குறித்து ஆராய்கின்றது இந்தியா

### ஜெய்சங்கர் ‘டுவிட்’



இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் இலங்கைக்கு மேலும் உதவுவது குறித்து இந்தியா ஆராய்கின்றது.

நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவில்

2




# வீட்டுக்கு உடன் போ; பொய் சொல்லாதே!

### யாழில் பீரிஸின் உருவப்பொம்மையை எரித்து ஐ.நா. அலுவலகம் முன்பாக மக்கள் போராட்டம்

**இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸின் உருவப் பொம்மையை யாழ்ப்பாணத்திலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரின் கள அலுவலகத்துக்கு முன்னால் இன்று எரித்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

2

## ஆஸ்திரேலியா நுழைய முயன்ற 41 இலங்கையர்கள் நாடு கடத்தல்

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்குள் செல்ல முற்பட்ட நிலையில் அந்நாட்டுக் கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்ட 41 இலங்கையர்கள் மீண்டும் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

2

## கைதான பேராதனைப் பல்கலை மாணவர்கள் 4 பேருக்கும் பிணை

கண்டி - பல்லேகல சர்வதேச விளையாட்டரங்கில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியின்போது பொலிஸ் அதிகாரிகளின் பணிக்கு இடையூறு ஏற்படுத்திய பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 4 மாணவர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் தெல்தெனிய நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது இந்த

2

### வத்தளையிலுள்ள வீடொன்றில்

## 5 துப்பாக்கிகளுடன் ஒருவர் மாட்டினார்!



வீடொன்றில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையில் 5 துப்பாக்கிகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வத்தளை - மாபோல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் துப்பாக்கிகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்று பொலிஸாருக்குக் கிடைத்த

2

## 26 வருடங்களாகச் சிறையில் வாடும் அரசியல் கைதி யாழ். வந்து தாயாருக்கு கண்ணீருடன் இறுதி அஞ்சலி



26 வருடங்களாகச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி விக்கினேஸ்வரநாதன் பார்த்தீபன் தனது தாயின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்வதற்காக இன்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டார்.

கடந்த 2017ஆம் ஆண்டு தந்தையின்

2

## இலங்கையில் நீள்கிறது வரிசை; இதுவரை 13 பேர் பரிதாபச் சாவு!



இலங்கையில் வரிசைகளில் காத்திருந்து இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடும் பொருளாதார நெருக்கடியால் அத்தியாவசியப் பொருள்களான எரிபொருள் மற்றும் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்குகூட அரசு பெரும் பாடுபடுகின்றது.

டொலர் பற்றாக்குறையால் உரிய வகையில் இறக்குமதி இன்மையால், எரிபொருள் மற்றும்

2

### 26 இலட்சம் ரூபா பெறுமதியான

## கேரளாக் கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது!



மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் பகுதியில் சுமார் 26 இலட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவை வைத்திருந்த பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு

2

## ரயில் சேவைகளை அதிகரிக்கத் திட்டம்



நாட்டில் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற ரயில் சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குத் திட்டமிடப்படுகின்றது

2

## நானுஓயாவில் காணாமல்போன மாணவன் நீர்கொழும்பில் மீட்பு!



நுவரெலியா மாவட்டம், நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெஸ்போட் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் காலை முதல் காணாமல்போயிருந்த 12 வயது மாணவனான மகேந்திரன் ஆசான் நேற்றிரவு நீர்கொழும்பு ரயில் நிலையத்தில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

அயல் வீட்டில் உள்ள நபர் ஒருவரே இச்சிறுவனுக்கு தொழில் பெற்றுத் தருகிறேன் என ஏமாற்றி, நானுஓயாவிலிருந்து ரயில் மூலம் நீர்கொழும்புக்கு

2

## கடும் பொருளாதார நெருக்கடியால் வெளியேறும் தொழில் வல்லுநர்கள்



இலங்கையில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள் உட்பட ஆயிரக்கணக்கான தொழில் வல்லுநர்கள் வெளிநாடு செல்லத் தயாராகி வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

இவர்கள் ஏற்கனவே பல்வேறு தொழில்களுக்கு வெளிநாடுகளில் விண்ணப்பித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பெருமளவிலான தொழில் வல்லுநர்கள்

2

## 5 துப்பாக்கிகளுடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தகவலின் பிரகாரம் இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

சுற்றிவளைப்பின்போது, வெளிநாடொன்றில் தயாரிக்கப்பட்ட இரட்டைக் குழல் ரகத்தைச் சேர்ந்த 2 துப்பாக்கிகளும், ஒற்றைக்குழல் ரக துப்பாக்கி ஒன்றும், பொயிட்22 ரகத்தைச் சார்ந்த 2 துப்பாக்கிகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், வத்தளை - மாபோல பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதானவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் வத்தளை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## கேரளாக் கஞ்சாவுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட பெண் மன்னாரைச் சேர்ந்த 35 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில், மேலதிக விசாரணைகளுக்காக அவர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## இலங்கையில் நீள்கிறது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எரிவாயுவுக்கு பல மாதங்களாக வரிசைகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு வரிசைகளில் காத்திருந்து, நோய்வாய்ப்பட்டு இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ரயில் சேவைகளை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

எனினும், தற்போது முடியுமான அளவு ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அதன் பிரதி பொது முகாமையாளர் வீ.எஸ்.பொல்வத்தகே ஊடகங்களிடம் தெரிவித்தார்.

டீசல் தட்டுப்பாடு காரணமாக பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் காரணமாக ரயில் சேவையைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்தநிலையில், ரயில் சேவைகளை அதிகரிப்பதற்குத் திட்டமிடப்படுவதோடு கால அளவைக் குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## நானுஓயாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அனுப்பியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சிறுவன், நீர்கொழும்பு ரயில் நிலையத்தில் இருப்பதைக் கண்ட உறவினர் ஒருவர், அவரைபொலிஸ்நிலையத்தில் கையளித்துள்ளார்.

காணாமல்போன சிறுவன் நீர்கொழும்புப் பகுதியில் இருக்கின்றார் என்று நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தின் ஊடாக நானுஓயா பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சிறுவனை நீர்கொழும்புக்கு அனுப்பிவைத்த சந்தேகநபரை கைதுக் செய்வதற்கான நடவடிக்கையை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கடும் பொருளாதார ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டைவிட்டு வெளியேறினால் அது நாட்டின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் எனப் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மருத்துவப் பட்டப்படிப்பைக் கற்கும் இளைஞர்கள் இறுதிப் பரீட்சை எழுதியதன் பின்னர் இங்கிலாந்தில் வேலைக்குத் தேவையான பரீட்சைக்குத் தோற்றுவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

## 26 வருடங்களாகச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள அழைத்துவரப்பட்ட அவர், இன்று தாயின் இறுதிக்கிரியைக்கு அழைத்து வரப்பட்டார்.

பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் அவர் தனது தாயாருக்குக் கண்ணீருடன் இறுதி அஞ்சலி செலுத்திய காட்சி அனைவரின் மனதையும் நெருடலுக்குள்ளாக்கியுள்ளது.

யாழ்ப்பாணம் , திருநெல்வேலியில் வசித்து வந்த குறித்த அரசியல் கைதியின் தாயாரான விக்கினேஸ்வரநாதன் - வாகீஸ்வரி (கண்ணாடி அம்மா) கடந்த 15ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

மண்ணறைக்குப் போவதற்குள் என் பிள்ளைக்கு ஒரு பிடி சோறூட்ட வழிகாட்டையா? என நல்லூரானிடம் வேண்டிக் கொண்டிருந்த தாய், இதுவரை தன் பிள்ளையின் திருமுகம் காணாமலே விண்ணுலகை ஏகிவிட்டார் என உறவினர்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

கடந்த 1996ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு தமிழ் அரசியல் கைதியாக கடந்த 26 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் விக்கினேஸ்வரநாதன் பார்த்தீபன் இலங்கை மத்திய வங்கி குண்டுவெடிப்பு சம்பவத்தின் ஆயுள் தண்டனைக் கைதியாக உள்ளார்.

குறித்த தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வருகின்றது.

## கைதான பேராதனைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி பல்லேகலையில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியின்போது விளையாட்டரங்கின் நுழைவாயிலில் பொலிஸாரை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டமை தொடர்பில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் ஒரு மாணவி உட்பட 4 மாணவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்தக் கைது நடவடிக்கைக்கு எதிராக மாணவர் ஒன்றியங்கள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆஸ்திரேலியா நுழைய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆஸ்திரேலியாவில் இருந்து வந்த விசேட விமா னத்தில் அவர்கள் இலங்கையை வந்தடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நீர்கொழும்பு, முல்லைத்தீவு, சிலாபம், உடப்பு மற்றும் மாரவில பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அவர்களில் 16 வயதுக்குட்பட்ட 6 சிறுவர்களும் அடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் அனைவரும் பல நாள் மீன்பிடி படகில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளனர்.

இந்தநிலையில் ஆஸ்திரேலியாப் பாதுகாப்புத் தரப்பினரால் கைதுசெய்யப்பட்ட 41 இலங்கையர்களும் கிறிஸ்மஸ் தீவில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இலங்கை வந்துள்ள அவர்கள் நீர்கொழும்பு நீதிவான், மாலன் ஜயசூரிய முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டமையை அடுத்து அவர்களில் 37 பேர் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், அவர்களைஆஸ்திரேலியாவுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்த நால்வரை விளக்கமறியலில் வைப்பதற்கு நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## இலங்கைக்கு மேலும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது குறித்து ஆராயப்பட்டது என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தமது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை எதிர்நோக்கியுள்ள வெவ்வேறு பிரச்சினைகள் மற்றும் அதற்கு இந்தியாவால் வழங்கக் கூடிய ஒத்துழைப்புகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த இக்கட்டான நிலையில் அண்டைய நாடான இலங்கையுடன் இணைந்து செயற்படுவதற்கு ஒருமித்த ஆதரவு வழங்கப்பட்டுள்ளது எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## ஐ.எம்.எவ். குழு நாளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நோக்கிலேயே இந்தக் குழு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

அவர்கள் ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் மத்திய வங்கி அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளனர் என்று நிதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## கைதான பேராதனைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசு தவறான கருத்துக்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தெரிவித்துள்ளது எனக் கூறி அதற்கு எதிராக இன்று காலை யாழ். நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள் பேரணியாக ஐக்கிய நாடுகள் அலுவலகத்துக்கு வந்தடைந்தனர்.

அதன்போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தெரிவித்துள்ள கருத்துக்களை அவர்கள் வன்மையாகக் கண்டித்தனர்.

பீரிஸ் உடனே வீட்டுக்குப் போ, பொய் சொல்லாதே, இன அழிப்பு வேண்டாம், சர்வதேச விசாரணை வேண்டும் போன்ற வாசகங்களைத் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பீரிஸின் உருவப்பொம்மையும் நடுவீதியில் தீயிட்டுக் கொளுத்தினர்.

போராட்டத்தின் நிறைவில், போராட்டக்காரர்கள் ஐக்கிய நாடுகள் அலுவலகத்துக்குத் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரைக் கையளித்தனர். இந்தப் போராட்டத்தில் அரசியல் கைதிகளின் உறவுகள், வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் சமூகத்தினர், அரசியல் கட்சிகளின் உறுப் பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.








# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தீராத் தலைவலி

நாட்டின் ஆட்சி முறைப் பிரச்சினைகளுக்கும் ஒரேயடியாகத் தீர்வு கிடைக்க இருந்த வாய்ப்பை இடையில் சுழியோடி குழப்பியடித்து, தாம் பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டு ஒரு மாதமாறது. ஆனால், எதுவும் பிரத்தியேகமாக – பிரயோசனமாக – நடந்ததாகத் தெரியவில்லை.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டியபடி, பிரதமர் ரணில் விக்கிரம சிங்க வெறுமனே காலநிலை அறிவிப்பாளர் இன்று மழை வரும், நாளை சூறாவளி வீசும், அடுத்த நாள் சுனாமி தாக்கும் என்று கூறுவது போல, நெருக்கடிகள் வரும், இக்கட்டுகள் இறுகும், கஷ்டங்கள் தீவிர மடையும் என்று எதிர்வுகூறல் மட்டுமே கூறிக்கொண்டு இருக்கின்றார்.

இந்தப் பத்தியில் நாம் ஏற்கனவே கூறியபடி கெட்ட காலம் பிறக்குது, கெட்ட காலம் பிறக்குது என்று குடுகுடுப்பைக்காரன் போல ரணில் கூறியமை தவிர வேறு பிரயோசனமாக எதுவுமே நடக்கவில்லைதான்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும், அவரை அந்தப் பதவியில் நியமித்த் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் 'வெறும் கை முழம் போடுவது போல' மந்திரத்தில் மாங்காய் பறிக்கும் கதைகள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நிஜத்தில் உருப்படியாக எதுவும் நடைபெறுவதாக இல்லை.

இருவரும் தனித்தனியாக கூட்டங்களுக்கு மேல் கூட்டங்கள் போடுகிறார்கள். கலந்துரையாடல்களுக்கு மேல் கலந்துரையாடல்கள் நடத்துகிறார்கள். கட்டளைகளுக்கு மேல் கட்டளைகள் போடுகின்றார்கள். குழுக்களுக்கு மேல் குழுக்கள் அமைக்கிறார்கள்.

ஆனால் மக்களின் அத்தியாவசிய தேவைகள், சேவைகள் தொடர்பில் நெருக்கடிகள் தீவிரம் அடைந்தமையைத் தவிர வேறு எந்த விடயமும் முன் நகர்வதாகத் தெரியவில்லை. மாறாக, பின்னடைவு தான் தென்படுகின்றது.

இதில் இன்னும் வேடிக்கை என்னவென்றால் ஒரே விவகாரத்திற்காக இருவரும் வெவ்வேறாக – தனித்தனியாக – கூட்டம் போடுகிறார்கள். விடங்களைக் கையாள வெவ்வேறான பிரதிநிதிகளை நியமிக்கின்றார்கள். அப்படி இருந்தும் கூட எதுவும் முன்நகர்வதாக இல்லை. எதுவும் நடப்பதாகவும் இல்லை.

அதிகாரிகளைப் பொறுத்தவரை சட்டியில் இருந்தால்தானே அவர்கள் அகப்பையில் வழங்குவதற்கு? பார்த்திருப்பதைத் தவிர – வாளவிருப்பதைத் தவிர – அதிகாரிகளுக்கு வேறு வழியே இல்லை.

இதெல்லாம் புரியாமல் மாவட்டங்களில் இருக்கும் அதிகாரிகள் தாங்களும் தங்களுக்கு பட்டவற்றை தான்தோன்றித்தனமான முடிவுகளாக எடுத்து, நடவடிக்கைகளை மேற்கொண் குழப்பங்களை இன்னும் தீவிரமாகிக் கொண்டிருக்கின்றாரகள்.

பெற்றோல் உட்பட எரிபொருள் தாங்கிய கப்பல்கள் இனிமேல் எப்போது இலங்கைக்கு வருமென்று தெரியாத நிலை நீடிக்கின்றது. அதற்கிடையில் வரக்கூடிய பெற்றோல் போன்ற எரிபொருள் மற்றும் எரிவாயு சிலிண்டர்களை எப்படி விநியோகிக்கலாம் என்று மாவட்ட அரச அதிபர்கள் சிலர் முந்தி அடித்து, ஆரவாரம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். தனியான பங்கீட்டு அட்டைக்குக் கொடுப்பதா இருக்கும் குடும்ப அட்டைக்கு வழங்குவதா, வாகனங்களின் கடைசி இலக்கத்தின் அடிப்படையில் கிழமைக்கு எனப் பிரித்து ஒவ்வொரு இலக்கத்துக்கு ஒவ்வொரு தினத்தில் வழங்குவதா என்றெல்லாம் அவர்கள் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்டுக்கு எரிபொருளே அண்மைக்காலத்தில் வராது என்ற உண்மையை மக்களிடம் எடுத்துரைப்பதை விடுத்து, இதிலும் கூட பித்தலாட்டம் செய்ய விழைகின்றனர் அரசியல்வாதிகள் இருந்து அதிகாரிகள் வரை. நாடும் திருந்தாது, பிரச்சினைகளும் தீராது என்பது மட்டும் உறுதியாகி வருகிறது.

# பட்டினிச் சாவில் இருந்து எங்களை நாங்களேதான் காப்பாற்ற வேண்டும்!

## ஐங்கரநேசன் எச்சரிக்கை



நாடு நாளுக்கு நாள் மிகப்பெரும் உணவுப் பஞ்சத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. புதிய பிரதமர் வந்திருப்பதாலோ, ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பினாலோ தற்போது ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி உடனடியாகத் தீர்ந்துவிடப் போவதில்லை. உணவுப் பற்றாக்குறைவு தானாகத் தீரும் என்று எவரும் காத்திருக்கவேண்டாம். மீட்பர்கள் எவருமிலர்; பட்டினிச் சாவில் இருந்து எங்களை நாங்களேதான் காப்பாற்ற வேண்டும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

தமிழ்த்தேசியப்பசுமை இயக்கத்தின் இராசதானியத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு விதைகள் வழங்கும் நிகழ்ச்சி கடந்த செவ்வாய்க்கிழமை அராலி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு மீண்டெழப் பதினெட்டு மாதங்கள் ஆகும் என்று அறிவித்திருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தங்களால் ஐந்து வருடங்களில் நாட்டை மீளக்கட்டியெழுப்ப முடியும் என்று தெரிவித்திருக்கிறார்.

ஆனால், சாதாரண மக்கள் அடுத்த மாதம் பற்றியோ, அடுத்த வருடம் பற்றியோ இப்போது சிந்திக்கவில்லை. அடுத்த வேளைக்குச் சாப்பாடு கிடைக்குமோ என்றே அங்கலாய்க்கின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மிகப்பெரும் மனிதப் பேரவலத்தை ஏற்படுத்தலாம் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது. இது மிகைப்படுத்தப்பட்ட எச்சரிக்கை அல்ல. உணவுற்பத்தி குறைந்து வருவதாலும் உணவுப் பொருள்களின் விலை உச்சத்துக்குச் சென்றுகொண்டிருப்பதாலும் ஒருவர் நாளாந்தம் எடுக்கும் உணவின் அளவு குறைந்து வருகிறது. பசியால் மயங்கி விழுகின்ற சம்பவங்களும் பதிவாகி வருகின்றன.

பொருளாதார நெருக்கடி எப்போது தீரும் என்று எமது தலைவர்கள் சோதிடக்காரர்கள்போல ஆருடங்களை மட்டுமே கூறிக் கொண்டிருக்கின்றனர். உலக நாடுகளிடம் இருந்து கடன்பெறுவதில் மட்டுமே குறியாக இருக்கின்றனர். மக்கள் இன்றைக்கு எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கு எந்தவொரு தீர்வையும் அவர்கள் முன்வைக்கவில்லை. நாட்டைப் படுகுழிக்குள் தள்ளிய அவர்களால் அதற்கான தீர்வை முன்வைக்கவும் இயலாது.

போர்க்காலங்களில் தமிழ் மக்கள் தற்போது அனுபவிக்கும் நெருக்கடிகளைவிட மிகமோசமான நெருக்கடிகளையெல்லாம் அனுபவித்திருந்தார்கள்.

ஆனால், அப்போது மக்களின் பாதி வலிகளை விடுதலைப் புலிகள் தங்கள் தோள்களில் தாங்கியதால் நெருக்கடிகளை எங்களால் கடந்துவர முடிந்தது. தற்போது, ஒவ்வொருவரும் எங்களால் இயன்றளவு உணவை உற்பத்தி செய்ய ஆரம்பித்தால் மாத்திரமேஏற்படவுள்ளஉணவுப்பஞ்சத்துக்கு முகங்கொடுக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

# பசுமை இயக்கத்தின் இராசதானிய திட்டம் அராலியில் முன்னெடுப்பு







தமிழ்த் தேசியப்பசுமை இயக்கத்தின் இராசதானியத் திட்டத்தின் கீழ் அராலியில் 50 விவசாயிகளுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விதைகள் வழங்கப்பட்டன.

இதற்கான நிகழ்ச்சி அராலி ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் தே. மிதுசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், செயலாளர் ம. கஜேந்திரன், ஓய்வுநிலைப் பிரதி விவசாயப்பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றியதோடு, தெரிவுசெய்யப்பட்ட 50 விவசாயிகளுக்குக் குரக்கன், காராமணி (கௌபி), பயறு ஆகிய விதைகளையும் வழங்கி வைத்துள்ளனர்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளையும் காலநிலை மாற்றங்களையும் கருத்திற்கொண்டு, சிறுதானியச் செய்கைகளை ஊக்குவிக்கும் முகமாக இராசதானியம் திட்டத்தை விவசாயக் கிராமங்களில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சாதாரணதர வினாத்தாள் மதிப்பீடு பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன!

கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நேற்று ஆரம்பமாகின.

பிள்ளைகளின் எதிர்காலம் கருதி கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முன்னுரிமை வழங்குமாறு எரிபொருள் நிலைய உரிமையாளர்களிடம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல். எம்.டி.தர்மசேன கோரிக்கை விடுத்துள்ளார்.

கடமையில் ஈடுபடும் அதிகாரிகளிடம் உள்ள கடமை தொடர்பான கடிதம் அல்லது உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளை சோதனைசெய்துஎரிபொருளைவிநியோகிக்க முடியும்.

பெறுபேறுகளைவிரைவில்வெளியிடுவது பரீட்சைத் திணைக்களத்தின் எதிர்பார்ப்பு என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
ஞாயிற்றுக்கிழமை 19.06.2022

# ஆப்கானில் குருத்வாரா மீது வெடிகுண்டு வீசி தாக்குதல்; இரண்டு பேர் உயிரிழப்பு



ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாத அமைப்பின் ஆட்சி நடக்கிறது. இந்நாட்டு தலைநகர் காபூலில் உள்ள கார்டா பர்வான் பகுதியில் அதிகளவில் இந்துக்களும், சீக்கியர்களும் வசித்து வருகின்றனர். இங்குள்ள குருத்வாராவில் நேற்று ஏராளமான சீக்கியர்கள் வழிபாடு நடத்திக் கொண்டு இருந்தனர். அப்போது, திடீரென குருத்வாரா மீது மர்ம நபர்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தினர். இவர்கள் தீவிரவாதிகளாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இந்த தாக்குதலில் குருத்வாரா கட்டடம் சேதமடைந்தது. அதில் இருந்தவர்கள் அலறியடித்து வெளியேறினர். இந்த குண்டுவெடிப்பில் 2 பேர் பலியாகினர். 7 பேர் காயமடைந்தனர். முன்னதாக, வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட வாகனத்தை பாதுகாப்பு பணியில் இருந்த வீரர்கள் தடுத்து நிறுத்தியதால், தற்கொலைப் படை தாக்குதல் தடுக்கப்பட்டது. இது தொடர்பாக ஆப்கான் வெளியுறவு துறை செய்தி தொடர்பாளர் அப்துல் நபி கூறுகையில், "சம்பவ இடத்தில் தீவிரவாதிகளுக்கும், தலிபான் வீரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதில், தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்றார்.

குருத்வாரா மீது வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது தொடர்பாக இந்திய வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், 'குருத்வாரா மீது நடத்தப்பட்ட கோழைத்தனமாக தாக்குதல் கண்டிக்கத்தக்கது. ஆப்கான் நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருகிறோம்,' என்று கூறியுள்ளார்.

## 18வயது கொலிவுட் நடிகர் மர்ம சாவு



கடந்த 2019ம் ஆண்டு அமேசான் பிரைம் வீடியோ சீரிஸில் வெளியான Just Add Magic வெப்சீரிஸில் கௌவுரவ வேடத்தில் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்திய கொலிவுட்டின் இளம் நடிகர் டைலர் சாண்டர்ஸ். அவரது நடிப்புக்காக எம்மி விருதுக்கு நாமினேட் ஆகி இருந்தார். இந்நிலையில், மர்மமான முறையில் அவர் இறந்து கிடந்தமையை அறிந்து கொலிவுட் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது. அவருக்கு வெறும் 18 வயது தான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓரிரு நாள்கள் முன் உயிரிழந்த இவரது மரணம் தொடர்பான விசாரணையை பொலிஸார் தீவிரப்படுத்தி உள்ளனர். கொலிவுட்டில் 10 வயது முதலே பல படங்கள் மற்றும் டிவி தொடர்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்து அசத்தி வந்தவர் டைலர் சாண்டர்ஸ். கடந்த 2017ம் ஆண்டு "Fear the Walking Dead' எனும் பிரபல தொலைக்காட்சி தொடரில் முக்கிய கதாபாத்திரத்தில் இவர் நடித்து இருந்தார். இளம் ரசிகர்கள் மத்தியில் மிகவும் பிரபலமானவர்.

கடைசி படம் சமையல் புத்தகத்தில் உள்ள மேஜிக்கை கொண்டு உரு வாக்கப்பட்ட JustAddMagic வெப்சீரிஸில் லியோ எனும் கதாபாத்திரத்தில் நடித்த டைலர் சாண்டர்ஸ் கடந்த 2019ம் ஆண்டு கெவின் சார்போ நடிப் பில் வெளியான "The Reliant' படத்தில் நடித்திருந்தார்.

## உலக நாடுகளில் அதிகாிக்கும் வைரஸ் பாதிப்பு இதுவரை 54.40 கோடி பேருக்கு தொற்று உறுதி

கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 519,211,295 பேர் குணமடைந்துள்ளனர். சீனாவின் உகான் நகரில் 2019ம் ஆண்டு டிசம்பர் இறுதியில் முதன்முறையாக கொரோனா பெருந்தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டு வெளியுலகிற்கு தெரியவந்தது. தற்போது கொரோனா வைரஸ் 225க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையிலும் வைரஸ் உருமாற்றமடைந்து பாதிப்பு அதிகரித்து வருகிறது.

டெல்டா, டெல்டா பிளஸ், ஒமைக்ரான் என்று உருமாறி வரும் வகைகளால் பல நாடுகளில் கொரோனா பரவல் அதிகரித்து பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 544,040,043 ஆக அதிகரித்துள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 519,211,295 பேர் குணமடைந்துள்ளனர். எனினும், கொரோனா வைரசால் உலகம் முழுவதும் இதுவரை 63 லட்சத்து 40,199 பேர் உயிரிழந்து உள்ளனர்.



## அவதூறாக பதிவு வெளியிட்டதற்காக கூகுள் நிறுவனத்திற்கு அபராதம்




கூகுள் நிறுவனம் அவதூறாக பதிவு வெளியிட்டதற்காக அந்நிறுவனத்திற்கு மெக்சிக்கோ நீதிமன்றம் ஆயிரத்து 910 கோடி ரூபா அபராதம் விதித்து உத்தரவிட்டுள்ளது. மெக்சிக்கோவை சேர்ந்த வழக்கறிஞரும், எழுத்தாளருான ரிச்டர் மொராலஸ் என்பவர் போதைப் பொருள் கடத்தல் மற்றும் சட்ட விரோத பணப்பரிமாற்றத்தில் ஈடுபடுகிறார் என கூகுள் நிறுவனம் பதிவு ஒன்றை வெளியிட்டிருந்தது.

கடந்த 2014ம் ஆண்டு இந்த பதிவு வெளியிடப்பட்ட நிலையில், இது தன் பெயருக்கு களங்கம் விளைப்பதாக மொராலஸ் தெரிவித்திருந்தார். மேலும் இந்த பதிவை நீக்குமாறு கூகுள் நிறுவனத்திற்கு அவர் கோரிக்கை விடுத்தார். ஆனால் அவரது கோரிக்கையை நிராகரித்த கூகுள் நிறுவனம் அந்த பதிவை நீக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த அவர் இது தொடர்பாக 2015ம் ஆண்டு மெக்சிகோ நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிமன்றம், ரிச்டர் மொராலஸ் பெயருக்கு களங்கம் ஏற்படுத்திய கூகுள் நிறுவனம் ரூ.1,910 கோடி அவருக்கு அபராதம் செலுத்த வேண்டும் என தீர்ப்பளித்தது.

இதற்கு பதிலளித்த கூகுள் நிறுவனம், தாங்கள் வெளியிட்ட பதிவு கருத்து சுதந்திரம் மற்றும் அடிப்படை உரிமைகளை குறித்து மதிப்பிடும் என கூறியது. மேலும் இத்தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்வோம் எனவும் தெரிவித்துள்ளது. ஏற்கனவே இதுபோன்ற வழக்கில் ஆஸ்திரேலிய நீதிமன்றம் கூகுள் நிறுவனத்துக்கு ரூ.3.80 கோடி அபாரதம் விதித்தமை குறிப்பிடத்தக்கது.

### தீவிரவாத அமைப்புகளுக்கு நிதி உதவி வழங்கிய விவகாரம்;

## சாம்பல் பட்டியலில் இருந்து பாகிஸ்தான் விடுவிக்கப்பட்டது



தீவிரவாத அமைப்புகளுக்கு நிதிஉதவி வழங்கிய குற்றச்சாட்டின் அடிப்படையில், சாம்பல் பட்டியலில் இருந்த பாகிஸ்தான், தற்போது விடுவிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜேர்மனி நாட்டின் பெர்லினில் நிதி நடவடிக்கை பணிக்குழுவின் (சர்வதேச அளவில் நடக்கும் நிதிக் குற்றங்களை கண்காணிக்கும் அமைப்பு) கூட்டம் நடந்தது. அந்த கூட்டத்தில் ஏற்கனவே சாம்பல் (கிரே) பட்டியலில் உள்ள பாகிஸ்தானை அந்த பட்டியலில் இருந்து விடுவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வரும் ஒக்ரோபரில் நடைபெறும் முழுமையான அமர்வின் போது, சாம்பல் நிற பட்டியலில் இருந்து விடுவித்ததற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி நடவடிக்கை குழுவின் 'ஆன்சைட் விசிட்' முடிவு குறித்த நிதிக் குற்ற கண்காணிப்பு அமைப்பின் இணையதளத்திலும் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. முன்னதாக நிதி நடவடிக்கை பணிக்குழுவானது, தீவிரவாத அமைப்புகளுக்கு பாகிஸ்தான் நிதிஉதவி வழங்கி வருவதாக எழுந்த குற்றச்சாட்டின் தொடர்ச்சியாக, தற்போது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மதிப்பாய்வு செய்தது. நிதி நடவடிக்கை பணிக்குழு பாகிஸ்தானுக்கு நேரில் சென்று ஆய்வு செய்த அறிக்கையும் மதிப்பீடு செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தற்போது சாம்பல் பட்டியலில் இருந்து பாகிஸ்தான் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் அன்டோயின் பிளிங்கன், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் பிலாவலைச் சந்தித்த பிறகு, இந்த செயல்முறை தொடங்கியதாகவும், பெரும்பாலான மேற்கத்திய நாடுகளும் சீனாவும் பாகிஸ்தானை பணிக்குழு உறுப்பினராக்க அங்கீகரித்தன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. சாம்பல் நிற பட்டியலில் இருந்து பாகிஸ்தான் விடுவிக்கப்பட்டதற்கு தான் தான் காரணம் என்று பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கூறியுள்ளார். ஆனால், ஆளும் கூட்டணி தங்களது முயற்சியால் சாம்பல் நிற பட்டியலில் இருந்து பாகிஸ்தான் நீக்கப்பட்டதாக கூறி வருகின்றனர்.

# தேச நலனுக்கு எதிரான 'அக்னிபாத்' திட்டத்தை திரும்பப் பெற முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்து



தேச நலனுக்கு எதிரான அக்னிபாத் திட்டத்தை ஒன்றிய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

ராணுவத்தில் இளைஞர்கள் 4 ஆண்டுகள் மட்டுமே பணியாற்றக் கூடிய அக்னிபாத் திட்டத்திற்கு எதிராக இந்தியா முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

சென்னையிலும் நேற்று இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், ராணுவத்தில் ஒப்பந்த முறையில் ஆள் சேர்ப்பதற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு புதிதாகக் கொண்டு வந்துள்ள அக்னிபத் திட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் பாதுகாப்பின் மீது அக்கறை கொண்டுள்ள பல முன்னாள் ராணுவ அதிகாரிகள் இத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள்.

மாதமிருமுறை வெளிவரும் பிரபல ப்ரொன்ட்லைன் பத்திரிக்கைக்கு அளித்துள்ள பேட்டியில், முன்னாள் மேஜர் ஜெனரல் ஜி.டி பக்ஸி, இத்திட்டத்தைக் கேள்விப்பட்டுத் திடுக்கிட்டுப் போனேன் For God's sake please don't do it என்று தனது அச்சத்தை வெளிப்படுத்தியிருக் கிறார். இன்னொரு ஓய்வு பெற்ற லெப்டி னன்ட் ஜெனரல் ராஜ் கத்யன், 4 ஆண்டு ஒப்பந்தப் பணியில் சேரும் ராணுவ வீரர், தன் உயிரைத் தியாகம் செய்யும் அளவிற்கு போரில் பணியாற்றுவார் என எதிர்பார்க்க முடியாது என்று கவலை தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகள் தவிர, நாட்டின் பாதுகாப்புப் பணியில் பல்லாண்டுகள் பணியாற்றிய பல முன்னாள் ராணுவ அதிகாரிகளும், ராணுவப் பணி பகுதிநேர பணி அல்ல என்றும், இதுபோன்ற தேர்வு, ராணுவத்தில் கட்டுப்பாட்டைக் கெடுக்கும் என்றும் கூறி, இந்தத் தேர்வு திட்டம் ஆபத்தானது என எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இந்திய நாட்டின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு, லட்சக்கணக்கான இளைஞர்களின் ராணுவப் பணி எனும் இலட்சியத்தைச் சிதைக்கும் இந்த அக்னிபாத் எனும் தேச நலனுக்கு எதிரான திட்டத்தை உடனடியாக ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்' என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



# அக்னிபாத் போராட்ட எதிரொலி உஷார் நிலையில் சென்னை!

இந்திய ராணுவத்தின் முப்படைகளுக்கும் ஒப்பந்த அடிப்படையில் நான்கு ஆண்டுகளுக்கு பணி என்ற வகையில் அக்னிப் பாதை என்ற திட்டம் பாதுகாப்புத்துறை சார்பில் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஐந்து நாள்களாக பீகார், உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், டெல்லி, தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் இளைஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று சென்னையிலும் போர் நினைவுச் சின்னம் அருகே 500க்கும் மேற்பட்ட இளைஞர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. அக்னி பாத் திட்டத்துக்கு எதிரான போராட்டம் மற்றும் சட்ட ஒழுங்கை கருத்தில் கொண்டு சென்னை காவல் எல்லைக் குட்பட்ட அனைத்து சந்திப்புகளிலும் பொலிஸார் தடுப்புகளை அமைத்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று போர் நினைவு சின்னம் அருகே திடீர் போராட்டம் நடைபெற்ற நிலையில் நேப்பியர் பாலம் முதல் போர் நினைவுச்சின்னம் வரை, கொடிமர இல்லம் சாலை தொடங்கி போர் நினைவுச்சின்னம் வரை ஆர்.பி.ஐ. சுரங்கப்பாதை உள்ளிட்ட பகுதிகளில் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தலைமைச் செயலகம் உள்ளிட்ட அரசு அலுவலகங்களுக்கு செல்ல கூடிய வாகனங்கள், வீடுகள் அருகில் இருக்கக்கூடிய நபர்கள், 108 போன்ற அவசர தேவைகளுக்காக செல்லக்கூடிய வாகனங்கள் மற்றும் முறையான காரணம் இருந்தால் மட்டுமே பொலிஸார் போக்குவரத்து தடை செய்யப்பட்ட சாலைகளில் பொதுமக்களை அனுமதிக்கின்றனர்.

மேலும் போக்குவரத்து தளமாக இருக்கக்கூடிய கோயம்பேடு பேருந்து நிலையம் எம்.ஜி.ஆர். சென்ட்ரல் ரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம் உள்ளிட்ட முக்கிய இடங்களில் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள், சென்னையின் பிரதான சாலைகளான பூந்தமல்லி நெடுஞ்சாலை காமராஜர் சாலை அண்ணா சாலை ஜி.எஸ்.டி. சாலை உள்ளிட்ட இடங்களில் தடுப்புகள் அமைத்து அவர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# அக்னிபாத் படையில் சேர்ந்தால்தான் தேசப்பற்றா? என சீமான் கேள்வி



அக்னிபாத் படையில் சேர்ந்துதான் தேசப்பற்றை நிரூபிக்க வேண்டுமா? என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

மதுரை மேலூர் அருகே தும்பைப் பட்டியில் தியாகசீலர் கக்கன் அவர்களின் 114 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கக்கன் மணிமண்டபத்தில் மாலை அணிவித்து மரியாதை செய்தார். பின்பு தும்பைபட்டி மந்தை திடலில் சீமான் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார். அப்போது அவர் பேசுகையில், அரசியல் என்பது எதிர் காலத்தை தீர்மானிக்கும் வாழ்வியல் இதனை நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

பிறப்பில் இருந்து இறப்பு வரை தீர்மானிப்பது அரசு. அதனை தீர்மானிப்பது அரசியல். எனவும் டீ, டிபன் எல்லாம் பேச்சுவழக்கில் தமிழாக மாறி விட்டது, ஆனால், நாம் தேநீர் சிற்றுண்டி என மாற்றமுடியும். நாக்கை கூட திருத்த முடியாமல் நாட்டை எப்படி திருத்துவது? என கேள்வி எழுப்பினார் மேலும், ஐயாயிரம் கோடி முதலீடு செய்த கட்சிகள் முதல் இரண்டாவது இடத்தில் உள்ளனர், நான் ஒரு பைசா செலவு செய்யாமல் மூன்றாவது இடத்தில் உள்ளேன். நிச்சயம் தமிழகத்தில் மாற்றம் வரும், என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

எல்லோரும் எதிர்க்கும் அக்னிபாத் திட்டத்தை ஆளுநர் ஆதரிக்கின்றார். அமித்ஷா ஆதரிக்கின்றார். ராஜ்நாத் சிங் கூறுகிறார் இப்படையில் சேர்ந்தால் தேசப்பற்று வரும் என்று. இப்படையில் சேர்ந்தால்தான் தேசபற்று வருமா? என சீமான் கேள்வியும் எழுப்பினார்.

# கோவை விமான நிலையத்தில் மத்திய அமைச்சர் முருகன் தடுத்து நிறுத்தப்பட்டமையால் பரபரப்பு



கோவை விமான நிலையத்தில் மத்திய இணை அமைச்சர் எல்.முருகனிடம், நுழைவுச் சீட்டைக் கேட்டு மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் தடுத்து நிறுத்தியதால் சலசலப்பு ஏற்பட்டது.

பழனியிலிருந்து சென்னை செல்வதற்காக, கோவை விமான நிலையத்துக்குச் சென்ற எல்.முருகனிடம், நுழைவுச்சீட்டைக் காட்டுமாறு கேட்டு மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் தடுத்து நிறுத்தினர். இதில் எல்.முருகனும் அவருடன் வந்தவர்களும் அதிருப்தியடைந்தனர்.

பின்னர், அவருக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் ஏற்கெனவே நுழைவுச்சீட்டை வாங்கியிருந்த நபர், அங்கு வந்து கொடுத்த பின் அனைவரும் அனுமதிக்கப்பட்டனர்.

# அக்னிபாத் திட்டத்தில் மேலும் சில மாற்றங்கள் அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆலோசனை

இந்திய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நடத்திய ஆலோசனையில் அக்னிபாத்திட்டத்தில் இன்னும் சில மாற்றங்களை கொண்டு வருவது தொடர்பாக விவாதித்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அக்னிபாத் திட்டத்திற்கு எதிராக இளைஞர்கள் போராட்டம் நடத்திவரும் நிலையில், திட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவருவது தொடர்பாக, முப்படைகளின் தலைமைத் தளபதிகளுடன் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஆலோசனை நடத்தினார்.

பாதுகாப்பு துறையின் பணிகளில் அக்னி வீரர்களுக்காக 10 சதவீத இட ஒதுக்கீடு அமுல் படுத்தப்படும் என்று மத்திய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. மத்திய ஆயுதப்படை, அசாம் ரைபிள்ஸ் படைப்பிரிவில் 10 சதவீதம் அக்னி வீரர்களுக்கு ஒதுக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சகமும் அறிவித்துள்ளது.

மத்திய விமான போக்குவரத்துத் துறை அமைச்சகமும் தகுதி வாய்ந்த திறமைமிக்க அக்னி வீரர்களுக்கு தங்களது அமைச்சகத்தின் பணிக்கான முன்னுரிமை வழங்கப்படும் என கூறியுள்ளது. கர்நாடக காவல்துறையிலும், அக்னி வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று அம்மாநிலம் அறிவித்துள்ளது.

இதற்கிடையில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மத்திய கப்பல் படை தளபதி ஹரிகுமார், விமானப்படை தளபதி விவேக் ராம் சவுதரி, ராணுவத் தளபதி மனோஜ் பாண்டே ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனையில் அக்னிபாத் திட்டத்தில் இன்னும் சில மாற்றங்களை கொண்டு வருவது தொடர்பாக விவாதித்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

# மருந்தக உரிமையாளர்களுக்கென கல்முனையில் விசேட செயலமர்வு





நூருல் ஹுதா உமர்

'சிறந்த பார்மசி நடைமுறைகள்' தொடர்பில் கல்முனை பிராந்திய தனியார் மருந்தக உரிமையாளர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வொன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் ஏற்பாட்டில் நேற்று சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நாட்டில் தலைதூக்கும் போதைப் பொருள் கட்டுப்பாடு, நாட்டில் இப்போதைய நிலையில் உள்ள மருந்து தட்டுப்பாடுகள், பொருளாதார நெருக்கடியில் சுகாதார சேவைகளைக் கையாளுவது ஆகியவை தொடர்பில் ஆழமாக ஆராயப்பட்ட இந்த செயலமர்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு மருந்தக உரிமையாளர்களுக்கு விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் உயிரியல் வைத்திய பிரிவின் அபிவிருத்தியின் பொருட்டு கல்முனை பிராந்திய தனியார் பார்மசி உரிமையாளர்கள் சங்கத்தினால் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையிலான பணிமனை உத்தியோகத்தர்களிடம் நன்கொடையாக ஒருதொகை பணத்திற்கான காசோலை வழங்கி வைக்கப்பட்டது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் மற்றும் சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் எம்.பி.அப்துல் வாஜித் ஆகியோரின் சேவையை பாராட்டி கல்முனை பிராந்திய தனியார் பார்மசி உரிமையாளர்கள் சங்கத்தினால் பொன்னாடை அணிவித்து கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில் '2015ஆம் ஆண்டின் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சட்டமும், ஒழுங்கு விதிகளும்' தொடர்பில் உணவு மற்றும் மருந்து பரிசோதகர் டீ. வரதராஜன் விளக்கமளித்தார். மேலும் கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளர் டாக்டர் எம்.ஏ. நபீல், உணவு மற்றும் மருந்து பரிசோதகர் ஜீவராஜா, கல்முனை பிராந்திய தனியார் பார்மசி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவரும், உயிரியல் பாட ஆசிரியருமான நிசாத் செரீப், சங்கத்தின் செயலாளர் றினோஸ் மற்றும் கல்முனை பிராந்திய தனியார் பார்மசி உரிமையாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## காட்டு யானை தாக்கியதில் அக்போபுரவில் ஒருவர் சாவு

திருகோணமலை மாவட்டத்தின் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதியால் சென்ற ஒருவரை காட்டு யானை தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவ்வாறு உயிரிழந்தவர் மெதிரிகிரிய பகுதியைச் சேர்ந்த டபிள்யு எம்.சுனில் (வயது 42) எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாயில் இருந்து மெதிரிகியவுக்கு இவர் மோட்டார் சைக்கிளில் சென்ற போதே வீதியை மறித்து காட்டு யானை தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




## மட்டக்களப்புக் குடும்பம் ஹபரணை விபத்தில் காயம்

திருகோணமலை – ஹபரண பிரதான வீதியில் வான் ஒன்றும் லொறியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் வானில் பயணித்த நால்வர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று அதிகாலை 1.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்குச் சென்ற வான் ஒன்றும் திருகோணமலையிலிருந்து குருநாகலைக்குச் சென்ற லொறியொன்றுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்துக்குள்ளானோர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிகின்றது.

வானில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குழந்தை உட்படநால்வர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கிழக்குப் பல்கலை வேந்தரை கௌரவித்தது ஒளிக்கல்லூரி

கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு புதிய வேந்தராக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பேராசிரியர் மா.செல்வராசாவை வரவேற்று கௌரவிக்கும்நிகழ்வுநேற்றுசனிக்கிழமை முனைக்காடு விவேகானந்த மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) இடம்பெற்றது.

ஒளிக்கல்லூரி அமைப்பின் ஏற்பாட்டில், ஒளிக்கல்லூரியின் அதிபர் மு.நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பேராசிரியர் செ.யோகராசா, வெல்லவூர் கோபால், ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் தே.சுப்பிரமணியம், ஓய்வு நிலை கொத்தணி அதிபர் சி.சந்திரசேகரம் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

ஓய்வு நிலை ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர் சி.குருபரன், ஓய்வு நிலை அதிபர்களான மா.வன்னியசிங்கம், வே.மகேசரெத்தினம், அதிபர் மா.சத்தியநாயகம் ஆகியோர் வேந்தர் மா.செல்வராசாவின் சமூக, கல்வி, ஆன்மிக பணிகள் தொடர்பில் உரையாற்றினர்.

ஒளிக்கல்லூரி அமைப்பின் ஸ்தாபகராக செயற்பட்டு படுவான்கரை கல்வி வளர்ச்சிக்கு வேந்தர் மா.செல்வராசா பங்களிப்பு செய்தவர் என்பதனை இதன்போது யாவரும் குறிப்பிட்டனர்.

வேந்தரை பாராட்டி பிரதேச பொது அமைப்புக்களினாலும், தனிப்பட்ட நபர்களினாலும் வாழ்த்துப்பாக்கம் வழங்கி வைக்கப்பட்டன. மாலை அணிவிக்கப்பட்டு பொன்னாடையும் போர்த்தி அவர் கௌரவிக்கப்பட்டார்.





# நாட்டின் போக்கைத் திருத்தி அமைக்க வேண்டும் அதற்கு ஜனாதிபதி கோட்டா பதவிவிலக வேண்டும்

## சம்பிக்க விடாப்பிடி



தெளிவான திட்டம் இல்லாத நாட்டின் போக்கை திருத்தியமைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்பாட்டலிசம்பிக்கரணவக்கதெரிவித்துள்ளார்.

இதற்கு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் எனவும், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது பிரதமரின் பொறுப்பு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதும், பொதுமக்களுக்கு விடயங்களை விளக்குவதும், நாட்டை ஒன்றிணைந்து கட்டியெழுப்புவதும் இன்றியமையாதது என்றும் கூறினார்.

ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர் –

இந்த விடயத்தில் அரசியல்வாதிகள் முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் நாடு ஆபத்தான கட்டத்தை நோக்கி சென்று கொண்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க எச்சரித்தார்.

இவ்வாறானதொரு நிலைமையைத் தவிர்க்க தெளிவான திட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றும் இதற்கு அனைத்துக்கட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

உரிய தலைமைத்துவமும், வழிகாட்டுதலும் இல்லாவிட்டால் நாடு முற்றாக ஸ்தம்பித்துவிடும் அபாயம் காணப்படுவதாகவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டார்.

# இந்தியாவின் அதானி நிறுவனத்திடம் கிழக்கு முனையம் ஒப்படைக்கப்படாது!

## அரசு அறிவிப்பு

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்குவதாக வெளியான குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் மறுத்துள்ளது.

இவ்வாறு துறைமுக தொழிற்சங்கங்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டு பொய்யானவை என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கிழக்கு முனையத்தை துறைமுக அதிகார சபையின் செலவில் அதற்கு சொந்தமான முனையமாக மாற்றுவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு துறைமுகத்தின் முனையத்தில் உள்ள கிரேன்களைப் பாதுகாப்பதற்கான ஒப்பந்தத்துக்கு 27 கோடி டொலர்கள் தேவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஒன்றரை ஆண்டுகளில் கிரேன்கள் கட்டி முடிக்கப்படும் என்றும் மேலும் 3 கோடியே 90 லட்சம் டொலர்கள் நிறுவனத்துக்கு செலுத்த வேண்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதத்துக்கு முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவே பொறுப்பு என நிமல் சிறிபால டி சில்வா குற்றம் சாட்டினார்.

சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையைப் பெறுவதற்கும் கடனை மறுசீரமைப்பதற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுமாறு ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் தான் தெரிவித்தார் எனவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் இளைஞர் மாயம்; பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு



கிளிநொச்சியில் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றுக்கு சென்ற இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் பகுதியை சேர்ந்த உதயராஜ் அம்சவர்த்தன் என்ற 19 வயதுடைய இளைஞரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

மேற்படி இளைஞன் கடந்த வியாழக்கிழமை அன்று காலை 7 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள தொழில் பயிற்சி நிலையம் ஒன்றுக்கு சென்று இருந்த நிலையில் இதுவரை வீடு திரும்பவில்லை என அவரது தாயாரான உதயராஜ் றோஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

காணாமல் போன தனது மகன் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும், தனது கணவர் உதயராஜ் 26-12-2005 அன்று யாழ். சாவகச்சேரி மீசாலையில் வைத்து அரச படைகளால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்.

இன்று வரை அவர் தொடர்பில் எந்த தகவலும் தெரியாத நிலையில் எனது ஒரே ஒரு மகன் அம்சவர்தன் காணாமல் போயுள்ளார்.

எனவே எனது அன்பு மகன் அம்சவர்தனை கண்டுபிடித்து தருமாறு கோரியுள்ளார்.

அவர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் 0741344699 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தெரியப்படுத்துமாறு அவர்களது குடும்பத்தினரால் கோரப்பட்டுள்ளது.

## பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு யாழில் உலருணவு பொதி வழங்கிவைப்பு



*இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கனடா போசகர் வி.சு.துரைராசாவின் நிதிப் பங்களிப்பில் யாழ்ப்பாணத்தில் பெண்தலைமைத்துவக் குடும்பத்துக்கு 'உள்ளத்திலிருந்து ஒரு துளி' என்னும் தொனிப் பொருளில் உலருணவுப் பொதி வழங்கி வைக்கப்பட்டது.*

*இந்த உலருணவுப் பொதியை சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசாமி வழங்கி வைத்தார்.*

# உலக வங்கி நிதியில் யாழில் பூங்கா திறப்பு!







(கலையமுதன்)

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் மூலோபாய நகரங்கள் அபிவிருத்தித் திட்டவரைவில் உலக வங்கியின் நிதிப் பங்களிப்பில் நிர்மாணிக்கப்பட்ட பூங்காக்கள் மற்றும் புனரமைக்கப்பட்ட குளம் என்பன திறந்து வைக்கப்பட்டன.

இதன்படி பாசையூர் பூங்கா, இராசாவின் தோட்ட வீதி பூங்கா, மடத்தடி பூங்கா என்பன நிர்மாணிக்கப்பட்டதுடன் சென்ஜோன் பொஸ்கோ அருகிலுள்ள பிள்ளையார் குளமும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண பணிப்பாளர் டி.பி.எஸ்.கே.திசாநாயக்க, யாழ் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன், யாழ் மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நாட்டின் பொருளாதார நிலையை கருத்திற்கொண்டு மிகவும் எளிமையான முறையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.06.2022இல் வெளியிடப்பெற்றது.